



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## அருள் மொழிகள்



வாழ்க்கையில் நாம் விருத்தி செய்ய வேண்டிய முக்கிய குணங்களில் கருணை ஒன்று. இன்பமும் துன்பமும் எல்லாருடைய வாழ்க்கையிலும் மாறி மாறி வருவதால் கஷ்டப்படுபவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டியது மிகவும் அவசியம். மற்றவர்களுக்கு உதவ ஒரு ஆர்வம் நமக்குள் ஏற்படுவதற்கு நமக்குள் கருணை இருக்கவேண்டும். பகவானுடைய கருணை எல்லையற்றதாக இருப்பதால் அவர் கருணைக்கடல் என்று வர்ணிக்கப்படுகிறார். லோகஸம்ரக்ஷணத்துக்காக அனேக அவதாரங்களை எடுக்க இந்த கருணைதான் பகவானை தூண்டுகிறது. ஒருவன் கருணையால் மற்றொருவனுக்கு உதவும் பொழுது அதற்கு கைமாறு எதிர்பார்க்கக்கூடாது. அப்பொழுதுதான் அவன் ஸத்புருஷன் என்று அழைக்கத்தக்கவன்.

கருணையினால்தான் குரு தன் சிஷ்யனுக்கு உபதேசம் செய்கிறார் என்று ஆதிசங்கர பகவத்பாதர் கூறுகிறார். சிஷ்யன் குருவை பக்தியுடன் அணுக வேண்டும். ஏனென்றால் குரு ஒரு கருணைக்கடல். மற்றும் பிரஹ்மஞானிகளில் உத்தமமானவர் என்பது பொருள். ஒவ்வொருவரும் அன்றாட வாழ்க்கையில் நற்குணமான கருணையை விருத்தி செய்து நடைமுறையில் கொண்டு வர வேண்டும். மற்றவர்களுக்கு செய்யும் சிறு உதவிக்கும் அதன் புண்ணியம் உண்டு. மற்றவர்களை பற்றி நல்லதை சொல்வதே ஒரு ஸத்காரியம். தனக்கு தீங்கு செய்ய வந்த ஒரு கபாலிகாவுக்கே ஆதிசங்கரர் கருணை காட்டினார். இது உன்னதமான கருணை.

குழந்தை பருவத்தில் இருந்தே சிறுவர்களிடம் கருணையை பதிய வைக்கவேண்டும். பள்ளியில் பயிலும் பொழுதும் தங்களுடன் படிக்கிறவர்களுக்கு எவ்வித சிறு உதவியையும் அளிக்க மாணவர்களுக்கு கற்றுத்தர வேண்டும். இரண்டு மனிதர்கள் சண்டை போடுவதை நாம் பார்த்தால் அவர்களை சமாதானப்படுத்தி சண்டையை நிறுத்த முயற்சிப்பது நம் கடமை.

கருணை நிறைந்தவர்களால் தான் இம்முயற்சியில் ஈடுபட முடியும். நல்ல பதவியில் இருப்பவன் தகுதியுடன் தன்னைத் தேடி வந்தவர்களுக்கு நியாயமான உதவிகளை செய்ய வேண்டும். மற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு நம் வாழ்க்கையில் நிறைய சந்தர்ப்பங்கள் உள்ளன. அவைகளை தவறவிட்டால் வருத்தப்படவேண்டி வரலாம். அது அறிவில்லாமையும்கூட. ஆதலால் எல்லோரும் மற்றவர்களுக்கு தங்களால் முடிந்த உதவியை செய்து பகவதனுக்ரஹத்தை பெறுவார்களாக.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

## விதுர நீதி

ऋजुपश्यतियस्सर्वे चक्षुषा नु पिवनिव |
आसीनमपि तूष्णीकं अनुरश्यन्ति तंप्रजाः ||६९||
ரு'ஜுபஶ்யதியஸ்ஸர்வே சக்ஷுஷா நு பிவனிவ |
ஆஸீனமபி தூஷ்ணீகம்' அனுரஶ்யந்தி தம்ப்ரஜா: ||69||

மனதில் தோஷமில்லாமல் ருஜுவாக யாவற்றையும் கண்ணால் பார்க்கும் அரசன் சும்மா இருந்தபோதிலும், பிரஜைகள் அவனை மிகவும் விரும்புவார்கள். (தொடரும்....)

यस्मात् त्रस्यर्ति भूतानि मृगव्याधान्मृगा इव |
सागरान्तामपिमहीं लब्ध्वा अपरिहीयते ||७०||
யஸ்மாத் த்ரம்யர்தி பூ$^{4}$தானி ம்ரு'க$^{3}$வ்யாதா$^{4}$ன்ம்ரு'கா$^{3}$ இவ |
ஸாக$^{3}$ராந்தாமபிமஹீம்' லப்$^{3}$த்$^{4}$வா அபரிஹீயதே ||70||

மிருகங்களைக் கொல்லும் வேடர்களைக் கண்டு மிருகங்கள் பயப்படுவதுபோல் எவனைக் கண்டு பிரஜைகள் பயப்படுகின்றனரோ ; அப்படிப்பட்டவன் ஸமுத்திரங்களுக்குள் பட்ட பூமி முழுவதையும் ஆண்ட போதிலும் பதவியை விட்டு நழுவி விடுவேன்.

धर्ममाचरतो राज्ञ: सद्भिश्चरितमादितः ।
वसुधा वसुसंपूर्णा वर्धते भूतिवर्धनी ||७१||
த$^{4}$ர்மமாசரதோ ராத்ர: ஸத்$^{3}$பி$^{4}$ஶ்சரிதமாதி$^{3}$த: .
வஸுதா$^{4}$ வஸுஸம்பூர்ணா வர்த$^{4}$தே பூ$^{4}$திவர்த$^{4}$னீ ||71||

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)



இதற்கு முன்புள்ள ஸாதுக்களான அரசர்கள் செய்து வந்த தர்மத்தை விடாமல் செய்யும் அரசனுடைய பூமியானது, ஸுவர்ணம் நிரம்பி மேன்மேலும் ஸம்பத்துக்களை விருத்தி செய்வதாக ஆகிறது.

धर्मेणराज्यं विन्देत धर्मेण परिपालयेत् ।
धर्ममूलां श्रियं प्राप्य नजहाति नहीयते ॥७
த$^4$ர்மேணராஜ்யம்’ விந்தே$^3$த த$^4$ர்மேண பரிபாலயேத் .
த$^4$ர்மமூலாம்’ ஶ்ரியம்’ ப்ராப்ய நஜஹாதி நஹீயதே ||72||

தர்ம வழியாகத்தான் ஒருவன் இராஜ்யத்தைப் பெறவேண்டும், தர்மம் வழுவாமல் இராஜ்யத்தை பரிபாலிக்க வேண்டும். நியாயமான வழியில் வரி வாங்கவேண்டும். அப்படிப்பட்ட அரசனிடமிருந்து இராஜ்யம் என்றும் வழுவாது. அவன் ஒருநாளும் குறைவையும் அடையமாட்டான்.

अप्युन्मत्तात्प्रलपतः बालाच्च परिजल्पतः |
सर्वेतस्लारमाददयात् अश्मभ्य इव काञ्चनम् ||७३||
அப்யுன்மத்தாத்ப்ரலபத: பா$^3$லாச்ச பரிஜல்பத: |
ஸர்வேதஸ்லாரமாத$^3$த்$^3$யாத் அஶ்மப$^4$ய இவ காஞ்சனம் ||73||

பயித்தியக்காரன் புலம்புகின்ற சொற்களிலிருந்தும், மாறி மாறிப் பேசுகின்ற குழந்தைகளின் சொற்களிலிருந்தும் மற்றும் எல்லா இடங்களிலிருந்தும் ஸாரத்தைக் கற்களிலிருந்து தங்கத்தை எடுப்பதுபோல் எடுக்கவேண்டும்.

(தொடரும்....)

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆசார்யாளின் உபதேசங்கள்

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)


### 11. இறைவனின் தரிசனம் எப்போது கிடைக்கும்?


எத்தனையோ மஹான்கள் இறைவனின் தரிசனத்தைப் பெற்றார்கள். நமக்கு அவனது தரிசனம் கிடைக்காததற்குக் காரணம், நாம் நம்முடைய முன்னோர்கள் கடைப்பிடித்த வழியை ஸாதனையை - கடைப்பிடிக்காததேயாகும். இதற்கு விளக்கம் :



க்ஷாந்தம் ந க்ஷமயா
க்ருஹோசிதஸுகம் த்யக்தம் ந
ஸந்தோஷத:
ஸோடா து:
ஸஹசீதவாததபனக்லேசா ந
தப்தம் தப: |
த்யாதம் வித்தமஹர்நிசம்
நியமிதப்ராணைர் ந சம்போ:
பதம்
தத்தத்கர்ம க்ருதம் யதேவ
முனிபிஸ்தைஸ்தைர்பலைர்வஞ்சிதா: ||

மேலேயுள்ள சுலோகத்தின்படி, நம் முன்னோர்கள் செய்த ஸாதனையையே தான் நாமும் செய்கிறோம் என்று கூறலாம் . அது எப்படி? அவர்கள் தவம் செய்தார்கள், நாமும் தவம் செய்கிறோம். அவர்கள் தியானம் செய்தார்கள், நாமும் தியானம் செய்கிறோம். அவர்கள் வெயில் மழை இவற்றை சகித்துக் கொண்டார்கள். நாமும் இவற்றை சகித்துக் கொள்கிறோம். ஆனால், அவர்களுக்குக் கிடைத்த பலன் மட்டும் நமக்குக் கிடைப்பதில்லை. இது எப்படி? அவர்கள் தங்களுக்கு எதிலும் ஆசைகள் இருக்கக் கூடாது என்பதற்காகத் தவம் செய்தார்கள். நாமோ, நம் மனதிலுள்ள ஆயிரம் ஆசைகளைப் பூர்த்தி செய்துகொள்வற்காகத் 'தவம்' செய்கிறோம். அவர்கள் மழை, வெயில், குளிர் ஆகியவற்றை சந்தோஷத்துடன் சகித்தனர். நம் நிலை? வீட்டில் மின்சாரம் இல்லாவிட்டால், ஜெனரேட்டர் இல்லை என்ற காரணத்தால் வெறுப்புடன். "சரி, போகட்டும்" என்று பொறுத்துக் கொள்கிறோம். குளிர் காலத்தில் வெந்நீர் போட







விறகு இல்லாமல் போகலாம். அப்போது மட்டும், "சரி, விடு, தண்ணீரே போதும்" என்போம். இது நம் வழி ! அவர்கள் வழியோ.

யத்காங்க்ஷந்தி தபோபிரன்யமுனயஸ்தஸ்மின் தபஸ்யன்த்யமீ

"எவ்வளவு வசதிகள் இருந்தாலும் எனக்கு அது தேவையில்லை. ஈச்வர ஸாக்ஷாத்காரம்தான் வேண்டும்" என்பது அவர்களின் லட்சியமாக இருந்தது. அதேபோல் அவர்கள் பகவானின் பாதத்தை 24 மணி நேரமும் தியானித்தார்கள். நாமும் தியானம் பண்ணுகிறோம். எதன் மீது?

த்யாதம் வித்தமஹர்னிசம்

24 மணி நேரமும், "பணம் எப்படிச் சேர்ப்பது? அதை எப்படி இரட்டிப்பாக்குவது?" என்று பணத்தைப் பற்றியே நாம் தியானித்துக் கொண்டிருக்கிறோம். இந்தக் காரணங்கள்தான் அவர்கள் பெற்ற பலனை நாம் பெறவிடாமல் தடுக்கின்றன.

தத்தத்கர்ம க்ருதம் யதேவ முனிபிஸ்தைஸ்தைர்பலைர்வஞ்சிதா:

நம்முடைய ஸாதனை வழிக்கும் அவர்களது ஸாதனைக்கும் எவ்வளவோ வேறுபாடு! ஆகவே, நாமும் அவர்களுடைய வழியைப் பின்பற்ற வேண்டும். மனதிலேயுள்ள ஆசைகளுக்காக பகவானை வழிபடுவது சரியில்லை. ஆசைகளைப் போக்கிக் கொண்டால்தான் உண்மையான சுகத்தை அடைய முடியும். வருகின்ற ஆசைகளைத் தீர்த்துக்கொள்ள முயற்சிப்பதில் நாம் வெற்றியடைய முடியாது. ஆசைகள் தீராமல் வருத்தம்தான் மிஞ்சும். ஆசை யாருக்கும் இன்பம் சேர்க்காது. 10 ரூபாய் நம்மிடம் இருந்தால் 100 ரூபாய் வேண்டும் என்று ஆசை பிறக்கும். பிறகு 1000 ரூபாய் இருந்தால் போதும் என்ற நினைப்பு வரும். 1000 ரூபாய் கிடைத்தால் இலட்சாதிபதியாக வேண்டும் என்ற விருப்பம் தோன்றும். இலட்சாதிபதிக்கு கோடீசுவரனாக வேண்டுமென்ற ஆசை மலரும். இதற்கு முடிவுதான் எங்கே? நமது மனதில் ஆசைகள் இல்லாமல் இருக்க முயற்சி செய்து ஈச்வர ஸாக்ஷாத்காரம் ஒன்றுதான் தேவை என்ற நிலை வந்தால் நமக்கும் ஈச்வர தரிசனம் நிச்சயமாகக் கிடைக்கும். பகவானுக்கு யார் விஷயத்திலும் விருப்போ, வெறுப்போ கிடையாது. மனிதர்களுக்கு, அவரவர் செய்த கர்மாக்களுக்குத் தகுந்த பலனை அவன் கொடுக்கிறான். நீதிபதி எல்லோருக்கும் சமமாக தண்டனை கொடுப்பதில்லை. அவரவர்கள் செய்த தவறுக்குத் தகுந்த தண்டனையைத்தான் அவன் அளிக்கிறான். இதற்காக யாராவது நீதிபதியை நிந்திக்க முடியுமா? அதுபோல் நாம் செய்த கர்மாக்களுக்குத் தகுந்த பலனை இறைவன் கொடுப்பதால் அவனை நாம் குறை கூற முடியாது. (தொடரும் .....)

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## என்றும் புதியவர்

### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

## 2. பேரறிவு (மஹாப்ரக்ஞை)

### மஹாப்ரக்ஞை - கல்வியறிவும் ஆன்மிக நெறியும்

... பண்டிதர்களைப் போல் தர்க்க சாஸ்திரமே குறிக்கோள் என்று இல்லாமல், மனிதர்களின் ஆன்மிக முன்னேற்றமே முக்கியம் என்று ஆசார்யாள் கருதினார். எனவே, அவருடைய சிஷ்யர்களுக்காக அவர் நடத்திய பிரத்யேகமான வகுப்புகளிலும், பொது இடங்களில் அவருடைய அனுக்ரஹ பாஷணங்களிலும் வேதாந்த சாஸ்திரத்தை விரித்துரைப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். 1970களின் பிற்பகுதியில் அவர் கீழ்க்கண்ட நூல்களைத் தமது வகுப்புகளில் விரிவாகக் கற்பித்தார்: பகவத் கீதை, அதற்கு சங்கர பகவத்பாதர் எழுதிய உரை, ஆனந்தகிரி எழுதிய விளக்கவுரை; தைத்திரீய உபநிஷத் பகவத்பாதரின் பாஷ்யமும், அச்யுத க்ருஷ்ணானந்த தீர்த்தரின் 'வனமாலா' என்ற விளக்கவுரையும்; பிரம்ம சூத்திரம் பகவத்பாதரின் பாஷ்யம், மற்றும் ராமானந்த ஸரஸ்வதியின் 'ரத்னப்ரபா' என்ற விளக்கவுரையும், பூர்ணானந்தர் இந்த விளக்கவுரைக்கெழுதிய உரை. இவ்வகுப்புகள் அவருடைய சிஷ்யரும் இந்நாளைய மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளுக்காகவே நடத்தப்பட்டாலும், துறவிகளும் பண்டிதர்களும் உள்ளிட்ட பலர் இவ்வகுப்புகளில் அமரும் பேறு பெற்றனர். என்னுடைய நல்லூழினால் இணையற்றனவும், அமிழ்தனையவையுமான இவ்வகுப்புகளில் நானும் கலந்து கொண்டேன். ஆசார்யாளின் விளக்கங்கள் மிகத் தெளிவாக இருக்கும். தேவையற்ற சொல் ஒன்று கூட இருக்காது என்பதை நிச்சயமாகக் கூறுவேன். விளக்கம் கூறும் போது பல இடங்களில் அவருடைய ஆன்மிக சாதனையும் நிஷ்டையும் அந்த விளக்கங்களுக்குப் பின்புலமாக அமைந்திருப்பது நன்கு விளங்கும்...."



## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஆசார்யாளின் ஆன்மிகப் பயிற்சி அவருடைய விளக்கங்களில் எதிரொலிப்பதை அவரே ஓரிடத்தில் கூறியுள்ளார். "ஜகத்குரு பதிலளிக்கிறார்" என்ற தொகுப்பில் ஆசார்யாள் பல விஷயங்கள் குறித்து விடையளித்துள்ளார். அந்த தொகுப்பில் 'நிர்விகல்ப ஸமாதி' என்ற தலைப்பில் ஆசார்யாள் சுமார் இருபது கேள்விகளுக்கு விடை கூறியுள்ளர். அந்த உரையாடலின் இறுதியில் சிஷ்யர் கேட்கும் கேள்வியையும் ஆசார்யாளின் விடையையும் கீழே காணலாம்:

சிஷ்யர்: "ஆசார்யாள் தமது சொந்த அனுபவத்திலிருந்து நிர்விகல்ப ஸமாதி பற்றி ஏதாவது கூறுவார்களா?"

ஆசார்யாள் (சிரித்துக்கொண்டே): "இவ்வளவு நேரமும், சாஸ்திரத்தில் கூறப்பட்டவற்றை மட்டும் கிளி போல் ஒப்பித்துக் கொண்டிருந்தேன் என்றா நீ நினைக்கிறாய்?"

கற்கும் போது கசடறக் கற்றல் வேண்டும்; அதன் பின், அதற்குத் தக்கவாறு நடக்க வேண்டும் என்பது பொதுவிதி. ஆனால், ஆசார்யாளின் ஆன்மிகப் பயிற்சியில் இந்த வரிசை முறை மாறியிருந்தது. ஆசார்யாளுக்கு தர்க்கம்/ நியாய சாஸ்திரத்தில் பாடம் 1935ம் ஆண்டு துவங்கி 1940ம் ஆண்டு நிறைவுற்றது. அதன் பின்னரே அவர் தமது குருவிடம் முறையாக வேதாந்த பாடம் கேட்கத் தொடங்கினார். ஆனால் அவர் ஸமாதி யோகத்தின் உச்சியை எட்டிப் பரம்பொருளில் நிலைபெற்றதோ 1935ம் ஆண்டில்! இது இவ்வாறிருந்தாலும் ஆசார்யாளின் ஸமாதி அப்பியாசம் சாஸ்திரத்தை ஒட்டியே இருந்தது என்று அவரே தெளிவுபடுத்தியுள்ளார். உதாரணமாக, தைத்திரீய உபநிஷத்தில் உள்ள வாக்கியம் ஒன்றன் அடிப்படையில் ஆத்ம விசாரம் செய்ததைப் பற்றிக் கூறும் போது,



"... அப்பொழுது நான் ஸம்ஸ்க்ருதம் அறிந்திருந்தாலும், இறைவனின் அருளினாலேயே உபநிஷத் வாக்கியங்களின் உட்கருத்தும் அவை உணர்த்துபவையும் எனக்குச் சரியாகப் புரிந்தன. ஆசார்யாள் (ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்) எனக்கு தைத்திரீய உபநிஷத் பாஷ்யம் கற்பிக்கும் போது தான், நான் முன்னர் புரிந்து கொண்டதற்கும் பாஷ்யத்திற்கும் எந்த முரண்பாடும் இல்லை, என்பதை அறிந்தேன்"

(தொடரும்.....) மிக்க நன்றி : Centre for Brahmavidya

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

## நீதி மஞ்ஜரீ

### ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

அத்தியாயம் - 6

### உஷஸ்தி உபாக்யானம்

ஸ்ரீமத் ஆச்சார்யாளும் :

तस्यापि जीवितं प्रति उपायान्तरे अजुगुप्सिते सति जुगुप्सितं एतत् कर्म दोषाय । ज्ञानावलेपेन कुर्वतो नरकपातः स्यात् इत्यभिप्रायः प्रद्राणकशब्दश्रवणात् ।

தஸ்யாபி ஜீவிதம்' ப்ரதி உபாயாந்தரே அஜுகு³ப்ஸிதே ஸதி ஜுகு³ப்ஸிதம்' ஏதத் கர்ம தோ³ஷாய | ஜ்ஞானாவலேபேன குர்வதோ நரகபாத: ஸ்யாத் இத்யபி⁴ப்ராய: ப்ரத்³ராணகஶப்³த³ஶ்ரவணாத் |

"அவனுக்கும் ஜீவிக்க தோஷமில்லாத வேறு வழி இருக்கும் பக்ஷத்தில் தோஷமுள்ள கர்மத்தைச் செய்தால் தோஷமே. வித்யா கர்வத்தினால் செய்தால் நரகத்தில் பதனம் ஏற்பட்டே தீருமென்று அபிப்பிராயம், 'கஷ்டதசையை அடைந்தவர்' என்ற வார்த்தையை உபயோகித்திருப்பதால்" என்று பாஷ்யம் செய்திருக்கிறார்கள். இந்த உஷஸ்தி பிராணோபாஸகர் என்று இக்கதை மூலமாகவே தெரிகிறது. பிராணோபாஸகனுக்கு எல்லாம் அன்னமாகலாம்.



न ह वा एवंविदि किंचन अनन्नं भवति ।

ந ஹ வா ஏவம்'விதி³ கிஞ்சன அனன்னம்' ப⁴வதி |

என்ற வாக்கியத்தின் தாத்பர்யமும் பிராணோபாஸனையின் மஹிமையைச் சொல்ல வந்த அர்த்தவாத வாக்கியமே தவிர அவனுக்கும் பக்ஷ்யாபக்ஷ்ய விபாகம் உண்டு என்று காட்டுவதற்காகவே இக்கதையை ஸ்ரீவியாஸ பகவானும்

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

பிரஹ்ம ஸூத்திரம் மூன்றாம் அத்யாயம் கடைசி பாதத்தில் ஸரவான்னானு மத்யதிகரணத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

सर्वान्नानुमतिश्च प्राणात्यये तद्दर्शनात् ।
ஸர்வான்னானுமதிஶ்ச ப்ராணாத்யயே தத்$^{3}$த$^{3}$ர்ஶனாத் .

என்ற ஸூத்திரத்தில், அவ்வுஷஸ்தியின் பத்னிக்கு அப்படி அவசியமேற்படாததினால் அவள் சாப்பிடாமல் நிறுத்திக்கொண்டாள் என்பது மூலமாகவும் அனாவசியமாய் நிஷித்த ஸேவை செய்யக் கூடாதென்று ஏற்படுகிறது.

இவ்வுபாக்யானத்திலிருந்து கிடைக்கும் வேறு சில உபதேசங்களையும் கவனிப்போம்:-

1) அரசன் இந்த உஷஸ்தியை தேடிப்பார்த்ததாகச்சொல்வதினால் எக்கர்மம் செய்வதாயிருந்தாலும் அக்கர்மத்தை யதாவத்தாக அறிந்த பெரியோர்களைக் கொண்டுதான் செய்விக்க வேண்டுமென்றும் அவர்கள் அகப்படாமல் போனால் மாத்திரம் மற்றவர்களைக் கொண்டு செய்விக்கலாமென்றும் தெரிந்து கொள்ளலாம்.

2) அப்படி மற்றவர்களைக் கொண்டு ஆரம்பித்தாலும் விசேஷ ஞானமுள்ளவர் கிடைத்துவிட்டால், உடனே அவர் அனுமதியைப் பெற்றே மேல் கார்யங்கள் நடக்க வேண்டுமென்றும் தெரிகிறது. அவரும் தனக்கு எவ்வளவு அபேக்ஷையோ அதைமாத்திரம் கிரஹித்துக் கொண்டு தன் ஞானத்தை மற்றவர்களுக்கு உபதேசித்து அவர்கள் மூலமாகவே கார்யத்தை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டுமே தவிர அவர்களை உதாஸீனம் செய்துவிட்டு எல்லாவற்றையும் தானே செய்கிறேன் என்று ஆரம்பிக்கக்கூடாது. ஏனென்றால் விசேஷ ஞானமில்லாமல் போனாலும் அவர்கள் கர்மத்தில் அனர்ஹர்களல்ல. தேவதாஸ்வரூபம் தெரியாமலிருந்தாலும் இந்தக்கர்மம் இப்படிச் செய்ய வேண்டுமென்ற ஞானமிருந்தால் போதும், கர்மத்தில் அதிகாரியாய் விடலாம். அவர்களை உத்தேசித்து தான் முக்கியமாய் தக்ஷிண மார்க்கம் விதிக்கப்பட்டிருக்கிறது. கர்மஞானத்துடன் வித்யையுமிருந்தால் விசேஷ பலனுண்டென்பதில் ஸந்தேஹமில்லை. அதற்காகக் கர்மஞானத்துடன் மாத்திரம் செய்த கர்மம் நிஷ்பலன் ஆகாது. (தொடரும் ...) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி

# ||श्रीशारदास्तोत्रम्||

## श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

## ஶ்ரீஶாரதா³ஸ்தோத்ரம்

## (ஶ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

(ஶ்ரீ சிருங்ககிரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)

पुरा तव पदाम्बुजं हरिण एष सम्पूज्य यो जगत्प्रभुशिरः स्थिते शशिनि संस्थितिं प्राप्तवान् |
किमद्य हृदि संस्मरंस्तव पदाब्जसेवाफलं महोत्सवदिदृक्षया चरणसन्निधिं प्राप्तवान् ||४५||
புரா தவ பதா³ம்பு³ஜம்' ஹரிண ஏஷ ஸம்பூஜ்ய யோ ஜக³த்ப்ரபு⁴ஶிர: ஸ்தி²தே ஶஶினி ஸம்'ஸ்தி²திம்' ப்ராப்தவான் |
கிமத்³ய ஹ்ரு'தி³ ஸம்'ஸ்மரம்'ஸ்தவ பதா³ப்³ஜஸேவாப²லம்' மஹோத்ஸவதி³த்³ரு'க்ஷயா சரணஸந்நிதி⁴ம்' ப்ராப்தவான் ||45||

முன்னர் இந்த மான் உன் திருவடிகளை வழிபட்டு, உலகின் பிரபுவான சிவனின் தலைமீதிருந்த சந்திரனிடம் இடம் பெற்றது. உன் அந்த சரணஸேவையின் பலனை நினைவிற்கொண்டு, உன் உத்ஸவத்தைக் காண விரும்பி உன் சரணத்தின் அருகாமையை இன்று அடைந்துள்ளது. (45)

पिबेयुरपि मां सुरा यदि वसामि चन्द्रे तदे-त्यपायरहितं पदं जिगमिषुश्चिरं सञ्चरन् |
अपायवचनोज्झितं तव पदाब्जयोरन्तरं विलोक्य मृगशाबको वसति तत्र वाग्देवि किम् ||४६||
பிபே³யுரபி மாம்' ஸுரா யதி³ வஸாமி சந்த்³ரே ததே³-த்யபாயரஹிதம்' பத³ம்' ஜிக³மிஷுஶ்சிரம்' ஸஞ்சரன் |
அபாயவசனோஜ்ஜி²தம்' தவ பதா³ப்³ஜயோரந்தரம்' விலோக்ய ம்ரு'க³ஶாப³கோ வஸதி தத்ர வாக்³தே³வி கிம் ||46||

வாக்தேவி! "சந்திரனிடம் இருந்தால் (சந்திரனுடன்) தன்னையும் தேவர் பருகிவிடுவர்" என நினைத்து அபாயமற்ற இடம் தேடிப் பல நாட்கள் அலைந்து உன் திருவடிகளின் இடையே அபாயம் என்ற சொல்லுக்கே இடம் தராத இடம் உள்ளதெனக்கண்டு, இந்த வசிக்கிறததோ? மான் குட்டி இங்கே கிரணமான (பூர்ணசந்திரனின் அமுதத்தைத்தினமும் 15-ல் ஒரு பங்களவு, தேவர்கள் உணவாகக் கொள்வதால் தினமும் அந்தளவு குறைந்து அமாவாசையன்று

பூர்ணமாக மறைகிறான். பின் விதியின் திட்டப்படி தினமும் ஒரு பங்காகப் பதினைந்து நாட்களில் குறைந்த அளவை நிரப்பிப்பூர்ணமாகிறான் என்பர்) (மான் வாகனக்காட்சி.) (46)

भक्ताज्ञानमहेभा मद्वाहनसन्निरीक्षणादेव ।
निर्यान्त्विति सहसा किं सिंहं वाहं करोषि मातस्त्वम् ||४७||
ப$^{4}$க்தாஜ்ஞானமஹேபா$^{4}$ மத்$^{3}$வாஹனஸந்நிரீக்ஷணாதே$^{3}$வ .
நிர்யாந்த்விதி ஸஹஸா கிம்’ ஸிம்’ஹம்’ வாஹம்’ கரோஷி மாதஸ்த்வம் ||47||



தாயே! "பக்தனின் அறியாமையாகிற பெரும்யானைகள் என் வாஹனத்தைக் கண்டதுமே உடன் வெளியேறட்டும்" என்ற கருத்தால் சிங்கத்தை வாஹனமாகக் கொண்டுள்ளாயோ? (47)

लालयति वाणि किं त्वां
पञ्चास्यः स्कन्धमारोप्य |
युक्तमिदं भ्रातॄणां
सोदर्यालालनं लोके ||४८||
லாலயதி வாணி கிம்’ த்வாம்’ பஞ்சாஸ்ய: ஸ்கந்த$^{4}$மாரோப்ய |
யுக்தமித$^{3}$ம்’ ப்$^{4}$ராத்ரூ’ணாம்’ ஸோத$^{3}$ர்யாலாலனம்’ லோகே ||48||

வாணி ! உன்னைத் தோளில் சுமந்து இந்த பஞ்சாஸ்யன் தாலாட்டுகிறானோ? உடன் பிறந்தவருக்குத் தங்கையைச் சீராட்டுவது இயல்பு தானே ! (பஞ்சாஸ்யன், சிவன், சிங்கம். சிவன் தன் ஸகோதரியைத் தூக்கித் தாலாட்டுவது போல் இந்த வாஹனச் சிங்கம் தாலாட்டுகிறதோ? ஐந்து முகமுள்ள சிவன் பஞ்சவக்திரன் பஞ்சாஸ்யன். விரிந்த பிடரி மயிரால் முகவிரிவுற்ற சிங்கம் பஞ்சாஸ்யன் - பஞ்சமுகன்.) (48)

(தொடரும் ...)

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸ்ரீமத் அத்யாத்ம ராமாயணம்

## பாலகாண்டம்

### இரண்டாவது ஸர்கம்

பிரும்மா கூறியது: தேவ! கர்மத் தளையிலிருந்து விடுபட வேண்டும் என்ற பெருவிருப்பம் உடைய முமுட்சுக்களால், பிராணன்- புத்தி- புலன்கள்- மனம் முதலியவற்றால் இடைவிடாது சிந்திக்கப்படுகின்ற உங்கள் திருவடிகளில் பணிகிறேன். மூன்று குணங்களின் வடிவாய் அமைந்த மாயையை மேற்கொண்டு, தாங்கள் உலகத்தைப் படைத்துக் காத்து மறைக்கிறீர்கள். ஆனால், முற்றிலும் ஆனந்த மயமான உங்களை அவைகள் ஒட்டுவதில்லை. அவ்விதமே, தனிச் சிறப்பு வாய்ந்துள்ள தங்களிடம் பக்திகொண்டிருப்பவர்கள் அடையும் தூய்மையை, தங்களிடம் பராமுகமாக இருக்கும் தீயவர்கள், தானம்-அத்யயனம் போன்ற நற்கருமங்களைச் செய்தாலும், மன மாசு நீங்கியவர்களாக ஆவதில்லை என்பதே உண்மை. அதனால் தான், நெஞ்சத்தில் எப்போதும் தங்களையே தியானம் செய்து வருகின்ற சான்றோர்களான முனிவர்களுடன் கூட, என் மனத்தில் உள்ள மாசுகளை உடனே நீக்கவல்ல தங்கள் திருவடிகள் என்னால் செவ்வண்ணமே தரிசிக்கப்பட்டன.

ஹே ப்ரபோ! பிரும்மா முதலிய எங்களால், சொந்த நலனுக்காக முன்பு வேண்டிக் கொள்ளப்பட்டீர்கள்; பிரத்யட்சமான அனுபவத்துக்காக ஞானிகளால் இதயத்தில் எப்பொழுதும் தியானிக்கப் படுகிறீர்கள். மகாலட்சுமி தங்கள் திருமார்பிலேயே இடம் பெற்றிருந்தாலும் தங்கள் திருவடிகளில் அர்ப்பணிக்கப்பட்டு, பின்னர், பிரசாதமாக ஏற்கப்படும் துளசி மாலையின் மகோன்னத பெருமையை நினைத்து, நினைத்து சக்களத்திப் பொறாமையை உடனேஅடைகிறார். ஆக தங்கள் திருவடிகளில் பக்திசெலுத்துபவர்களிடம், மகாலட்சுமியிடம் வைத்திருப்பதைக் காட்டிலும் மிக அதிகமாகப் பேரன்பு கொண்டுள்ளீர்கள் என்பது எல்லோருக்கும் தெளிவாகிறதல்லவா? ஆகவேதான். சாரமான தத்துவத்தை அறிந்த பக்தர்கள், தங்கள் பால் பக்திசெலுத்துவதையே முதன்மையாக விரும்புகிறார்கள். சம்சாரமாகிய கொடிய நோயால் தவிக்கின்றவர்களுக்குத் தங்களிடம் செலுத்தப்படும் பக்தியே சிறந்த மாமருந்தாகும். எனவே, தங்கள் சரண கமலங்களில் எப்போதும் எனக்குப் பக்தி இருக்க வேண்டும் என்று நான் வேண்டிக்கொள்கிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்த பிரும்மாவை நோக்கி, பகவான் ஹரி, 'நான் என்ன செய்யவேண்டும்? என்று கேட்கவே, மிக்க மகிழ்ச்சியோடு பிரும்மா பதில் சொன்னார் (தொடரும்…)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்